தேதி - 11.11.2025.

அசல் வழக்கு எண்.101/2017

பி.வா.சா.1 - திரு. சந்தானகிருஷ்ணன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

நான் 10ம் வகுப்பு வரை படித்துள்ளேன். கோவிந்தராஜ் நாயுடு, சுந்தரராஜ் நாயுடு, ஜெயராம் நாயுடு ஆகியோர்கள் உடன் பிறந்த சகோதரர்கள். நான் ஜெயராம் நாயுடுவின் மகன். 1முதல் 6 வாதிகள் கோவிந்தராஜ் நாயுடுவின் வாரிசுகள். 4 முதல் 6 பிரதிவாதிகள் லேட். சுந்தரராஜ் நாயுடுவின் வாரிசுகள். எந்த மாதம், எந்த தேதியில் வாய்க்கரால் பாகம் ஏற்பட்டது என எனது எதிருரையிலும், நிரூபணவாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு சொல்லவில்லை. ரீசர்வே எண்.244/2-ல் 2.36 ஏக்கரில் மேல்புறம் 1 ஏக்கர் 18 செண்ட் சுந்தரராஜ் நாயுடுவிற்கும், கீழ்புறம் 1 ஏக்கர் 18 செண்ட் கோவிந்தராஜ் நாயுடுவிற்கும் வாய்க்கரால் பாகம் ஏற்பட்டதாக அதற்கு ஆதரவாக பி.வா.சா.ஆ.3, 4, 5 ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் சுந்தரராஜ் நாயுடு, கோவிந்தராஜ் நாயுடு, ஜெயராம் நாயுடு மூவரும் சேர்ந்து கிருஷ்ணம்மாளுக்கு ஒத்தி எழுதிக்கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் வாய்க்கரால் பாகம் ஏற்பட்டதாக குறிப்பு எதுவும் இல்லை என்று சொன்னால் அவ்வாறு குறிப்பு எதுவும் இல்லை. அதில்

நாராயிணியம்மாளுக்கு பிறகு மேற்படி மூவரும் அனுபவித்து வருவதாக குறிப்பிட்டு ஒத்தி எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3 ல் கீழ்புறம் நான்கு எல்லையில் எங்கள் நஞ்சை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் ரூ.1000/-ம், ரூ.600/-ம் மற்றும் ரூ.400/-ம் ஆக மொத்தம் ரூ.2000/- கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள என்று சொன்னால் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்திற்கான தொகையை அதை ஒத்தி எழுதிக்கொடுத்த மூவரும் வாங்கியுள்ளனர் என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ-4 ஆவணத்தில் அதில் கண்ட சொத்தை கோவிந்தராஜ் நாயுடு, சுந்தரராஜ் நாயுடு, ஜெயராம் நாயுடு ஸ்ரீரங்கமாளுக்கு கிரையம் கொடுத்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் எங்களுக்கு பாத்தியப்பட்ட அடியில் கண்ட நஞ்சையை கிரையம் கொடுக்கிறோம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.4 ல் கீழ்புறம் நான்கு எல்லையில் எங்களுக்கு பாத்தியப்பட்ட நஞ்சை என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. எனது எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் கோவிந்தராஜ் நாயுடு, சுந்தரராஜ் நாயுடு, ஜெயராம் நாயுடு ஆகியோர்களுக்கு இடையே வாய்க்கரால் பாகம் ஏற்பட்டதாகவோ ரீசர்வே எண்.244/2-ல் 2.36 ஏக்கரில் மேல்புறம் 1 ஏக்கர் 18 செண்ட் சுந்தரராஜ் நாயுடுவிற்கும், கீழ்புறம் 1 ஏக்கர் 18 செண்ட் கோவிந்தரராஜ் நாயுடுவிற்கும் வாய்க்கரால் பாகத்தில்

ஒதுக்கப்பட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிடப்படவில்லை. பி.வா.சா.ஆ.5 ஆவணத்திலும் கோவிந்தராஜ் நாயுடு, சுந்தரராஜ் நாயுடு, ஜெயராம் நாயுடு சேர்ந்து எழுதிக்கொடுப்பதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது. கோவிந்தராஜ் நாயுடு, சுந்தரராஜ் நாயுடு, ஜெயராம் நாயுடு ஆகியோர்களுக்கு இடையே வாய்க்கரால் பாகம் ஏற்பட்டதாகவோ ரீசர்வே எண்.244/2-ல் 2.36 ஏக்கரில் மேல்புறம் 1 ஏக்கர் 18 செண்ட் சுந்தரராஜ் நாயுடுவிற்கும், கீழ்புறம் 1 ஏக்கர் 18 செண்ட் கோவிந்தரராஜ் நாயுடுவிற்கும் வாய்க்கரால் பாகத்தில் ஒதுக்கப்பட்டதாகவோ பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை. பி.வா.சா.ஆ.5 ல் நான்கு எல்லை விபரத்தில் சுந்தரராஜ் நாயுடுவிற்கு சர்வே எண்.244/2 ல் கண்ட சொத்து பாத்தியப்பட்டதாக குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்று சொன்னால் அவ்வாறு குறிப்பிட்டு சொல்லப்படவில்லை.

Sd/- சந்தானகிருஷ்ணன்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

MUTHUKUMARAN Digitally signed by MUTHUKUMARAN Date: 2025.11.12 12:35:33 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

மதுரை.